**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.NO. 86/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**3 |
| Name | : | **நரேந்திரன்** |
| Husband Name | : | **நாராயணன்** |
| Address | : | **தில்லை நகர், நான்கு ரோடு, பெரம்பலூர்** |
| Age | : | 37/2025 |

**தேதி : 16.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் மெக்கானிக்கல் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். கடந்த 2 வருடத்திற்கு முன்பு அ.சா.1ன் செயின் காணாமல் போனபோது அந்த இடத்திற்கு நான் சென்றிருந்தேன். பெரம்பலூர் நான்கு ரோடு, தில்லை நகர் பகுதியில் சம்பவம் நடந்தது. சம்பவம் நடந்த மறுநாள் காலை 9.00 மணி அளவில் போலீஸார் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார்கள். மேப் வரைந்தார்கள். அதற்காக நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். நான் கையெழுத்து போட்டபோது அழகேசன், ராஜாங்கம், ராஜ்குமார் ஆகியோர்கள் இருந்தார்கள். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து போட்ட தாளில் அழகேசன், ராஜாங்கம், ராஜ்குமார் ஆகியோர்கள் கையெழுத்து போட்டார்களா என்றால் போட்டார்கள். சம்பவம்

நடந்த அன்றே போலீஸார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில்தான் கையெழுத்து போட்டேன் என்றாலும், சம்பவ இடத்தில் கையெழுத்து போடவில்லை என்றாலும்சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.